எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

அவர்கள் வெற்றி பெற்றது வெறும் 107 இடங்கள் தான். அவர்களுக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இந்த ஆட்சி தி.மு.க போட்ட பிச்சை!

இன்றைக்கு நடக்கக்கூடிய இந்த ஆட்சி நாம் போட்ட பிச்சையில் நடக்கிறது. ஏன் நான் பிச்சை என்று சொல்கிறேன் என்றால், நம்மோடு கூட்டணி வைத்துக்கொண்டு, நம் தலைவர் பெயரைச் சொல்லி, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியின் சாதனையைச் சொல்லி, வாக்குக் கேட்டு, மக்களைச் சந்தித்து, வாக்குகள் வாங்கி, அவர்களுடைய ஆதரவில் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டு இருக்கிறது. அதனால்தான் மீண்டும் சொல்கிறேன், இந்த ஆட்சி தி.மு.க போட்ட பிச்சை, இந்த ஓடுகாலி ஆட்சி.

தேர்தல் முடிவுகள் வந்த பிறகு முதலமைச்சராக என்னென்ன முயற்சிகள் எல்லாம் எடுத்தார் என்று உங்களுக்கே தெரியும். ஒவ்வொரு கட்சி தலைவர் வீட்டுக்கும் சோஃபா அனுப்பினார். சோஃபாவை நம் கூட்டணிக் கட்சிகளுக்கெல்லாம் அனுப்பினார். சோஃபாவிற்குள் என்ன இருக்கிறது என்று நான் சொல்லவில்லை, சோஃபா அனுப்பினார்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை என்ன செய்தார்? இரண்டாகப் பிளந்து, அதில் இருக்கக்கூடிய ஒரு சில தலைவர்களை மட்டும் சென்று பார்த்து, அவர்களுக்கு மட்டும் சோஃபா கொடுத்து, அவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு 15 சட்டமன்ற உறுப்பினர்களை மட்டும் தூக்கினார். இவர் நம்மைச் சொல்வார். அதாவது, தி.மு.க என்ன செய்தார்கள் என்றால், ஓட்டுக்குப் பணம் கொடுத்துவிட்டார்கள், வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்துவிட்டார்கள் என்று நம் மீது பொய் சொன்னார், பொய்க் குற்றச்சாட்டு சொன்னார். ஆனால், இவர் புதிய தொழில்நுட்பத்தில் சட்டமன்ற உறுப்பினரையே தூக்கிவிட்டார்.

இதுதான் இவர்கள் கொண்டு வந்த மாற்றம்.

சட்டமன்ற உறுப்பினரைத் தூக்கினால் மட்டும் பரவாயில்லை, இப்போது கட்சியையே இரண்டாக உடைத்து, அதில் ஒரு குழுவை இவர் வாங்கிவிட்டார்.

அதனால்தான் இன்றைக்கு இந்த மதுராந்தகம் இடைத்தேர்தல் நடந்துகொண்டு இருக்கிறது.

வாக்காளர்களுக்கு துரோகம் செய்துவிட்டு மீண்டும் போட்டியிடுகிறார்கள்!

கடந்த சட்டமன்றத் தேர்தலில் மதுராந்தகத்தில் வெற்றி பெற்றது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு வேட்பாளர். அவரை இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கிறார்கள். மே 11-ஆம் தேதி சட்டமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்கள். மே 11-ஆம் தேதி நம்பிக்கை வாக்கெடுப்பு. மே 12-ஆம் தேதி சட்டமன்ற உறுப்பினர் பதவி ஏற்பு. மே 25-ஆம் தேதி என 12 நாட்களில், தேர்தல் வரலாற்றிலேயே முதல் முறையாக இவர்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, நீங்கள் கொடுத்த வாக்குகளை உதாசீனப்படுத்திவிட்டு, உங்களுக்கு ஒரு மிகப்பெரிய துரோகத்தைச் செய்துவிட்டு, இன்றைக்கு கட்சி மாறி, மீண்டும் இன்னொரு கட்சிக்குச் சென்று, அங்கே சீட்டு வாங்கி, மீண்டும் உங்களிடத்தில் வாக்குக் கேட்டு வந்திருக்கிறார்கள். மதுராந்தகம் தொகுதி மக்கள் மீண்டும் ஏமாந்துவிடுவார்கள் என்று வாக்குக் கேட்டு வருகிறார்கள். அவர்களுக்கு தக்கப் பாடம் புகட்டுங்கள். எவ்வளவு திமிர் இருந்தால், எவ்வளவு கொழுப்பு இருந்தால், மீண்டும் உங்களிடத்தில் வாக்குக் கேட்டு வருவார்கள்? ஆனால் நான் கேள்விப்படுகிறேன். தாராபுரத்திலும் சரி, இங்கே மதுராந்தகத்திலும் சரி, எங்கு சென்றாலும் ஆளுங்கட்சியின் வேட்பாளர்களைத் தொகுதி மக்கள் தெருவிற்குள்ளேயே விடுவதில்லை. எல்லா இடங்களிலும் கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டார்கள். எல்லா இடங்களிலும் விரட்டி விரட்டி அடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

அன்புச் சகோதரர் பரந்தாமன்

வருகின்ற 6-ஆம் தேதி நீங்கள், நம்முடைய வெற்றி வேட்பாளர் பரந்தாமனுக்கு வாக்களியுங்கள். நல்ல வேட்பாளராக உங்களிடத்தில் தலைவர் ஒப்படைத்திருக்கிறார். சகோதரர் பரந்தாமனைப் பற்றி நான் உங்களிடத்தில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நன்கு படித்த வேட்பாளர், வழக்கறிஞர், ஒரு பண்பான வேட்பாளர், கொண்ட கொள்கையில் உறுதியாக இருக்கக்கூடிய, எந்த நிலைமை வந்தாலும் உறுதியாக நிற்கக்கூடிய வேட்பாளர். தேர்தலுக்குத் தேர்தல் கொள்கையை மாற்றிக்கொள்கின்ற பச்சோந்தி வேட்பாளர் கிடையாது நம்முடைய பரந்தாமன் அவர்கள்.

அவரைப் பற்றி இன்னொரு செய்தி உங்கள் எல்லாருக்கும் தெரிந்திருக்கும். தொலைக்காட்சிகளில் அவருடைய பேட்டிகளைப் பார்த்தீர்கள் என்றாலே ஆளுங்கட்சியையே அலற அலற ஓட விட்டவர்தான் பரந்தாமன் அவர்கள். அப்படிப்பட்ட அன்புச் சகோதரர் பரந்தாமன் அவர்களை உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் ஜெயிக்க வைத்து, எனக்குத் துணையாக, உங்கள் குரலாக, தி.மு.க-வினுடைய சட்டமன்ற உறுப்பினராக, மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினராக நீங்கள் தயவுசெய்து சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.

இப்போது சட்டமன்றம் எப்படி நடக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை, எல்லாருமே தொலைக்காட்சியில் நேரலையாகப் பார்த்திருப்பீர்கள். நான் இன்னொன்று கேட்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்னால் மதுராந்தகத்திற்கு வந்து நம்முடைய `ஓடுகாலி முதலமைச்சர்' அவர்கள் பேசினார். இல்லை, கத்தினார், யாராவது பார்த்தீர்களா? யாராவது பார்க்கவில்லை என்றால் கவலைப்படாதீர்கள். ஏனென்றால் மீண்டும் இரண்டு நாட்கள் கழித்து வந்து அதேதான் பேசுவார். எதுவும் புதிதாகப் பேச மாட்டார்.

பட்டப் பெயர் சொன்னால்தான் தெரியும்!

முதலமைச்சர் மதுராந்தகத்தில் தேர்தல் பிரச்சாரம் என்று கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் பேசினார். ஒலிபெருக்கியில் கத்து கத்தென்று கத்தினார். அந்த 30 நிமிடங்களில் 34 முறை ``தி.மு.க, தி.மு.க, தி.மு.க, தி.மு.க, தி.மு.க” என்றார். நம் பிரச்சாரத்தை அவர் செய்கிறார். நாம் கூட இத்தனை முறை தி.மு.க., தி.மு.க. என்று சொல்லமாட்டோம். அதில் ஒருமுறை ஆங்கிலத்தில் `டி.எம்.கே.' என்றார். இப்படி ஒரு முதலமைச்சர்.

பிறகு அங்கே இருக்கக்கூடிய அமைச்சர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும். ஒவ்வொரு அமைச்சருக்கும் பெயர் சொன்னால் தெரியாது, பட்டப் பெயர் இருக்கிறது. பட்டப் பெயர் சொன்னால்தான் தெரியும். `ட்ரோன் கேமரா அமைச்சர் பிரபு', `முறுக்கு அமைச்சர்,

ரீல்ஸ் அமைச்சர், `சங்கி அமைச்சர்', `உருட்டுக் கட்டை அமைச்சர்', `பவுடர் அமைச்சர்', பிளாக் டிக்கெட் அமைச்சர், `திருட்டு லாட்டரி அமைச்சர்'. இந்த லட்சணத்தில்தான் இன்றைக்கு இந்த அமைச்சரவை அமைந்திருக்கிறது. இவர்களுக்கெல்லாம் கேப்டன்தான் ஓர் அமைச்சர். அமைச்சர்கள் எல்லாம் இப்படி இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் கத்துவது தெரியுமா உங்களுக்கு? சென்ற முறை நான் தாராபுரத்தில் பேசிய போதே தெரியும்.

ஒரு சட்டமன்ற உறுப்பினர் எழுந்து நின்று சொல்கிறார். ``முதலமைச்சர் அவர்களே, எங்களுக்கு கார் இல்லை, கார் கொடுத்துவிட்டீர்கள். வேலை இல்லை, வேலை வாங்கிக் கொடுத்துவிட்டீர்கள். வீடு இல்லை, வீடு கொடுத்துவிட்டீர்கள். எனக்கு இப்போது சமீபத்தில் காதல் தோல்வி ஆகிவிட்டது, அதுவும் நீங்களே ஏற்பாடு செய்ய வேண்டும்.” என்கிறார். அவரும் சிரித்துக்கொண்டே செய்கிறேன் என்கிறார். நானும் நினைத்தேன் இதுபோல மக்களுக்கு புது திட்டங்கள் கொடுப்பார் என்று. இதுதான் நாம் கேட்ட மாற்றம்.

இன்னொரு சட்டமன்ற உறுப்பினர் எழுந்து நின்று பேசுகிறார். ``நாங்கள் முதலமைச்சருக்குப் பின்னால் அமர்ந்திருக்கிறோம். முதலமைச்சருடைய முகம் தெரியவில்லை. அதனால் எங்களுக்கெல்லாம் முதலமைச்சருடைய முகம் தெரிய வேண்டும் என்கிறார். முதலமைச்சர் அப்படியே எழுந்து பேசி கிழித்துவிடுவார் அல்லவா? அவர் பேசுவதையெல்லாம் நாங்கள் கேட்க வேண்டும், பார்க்க வேண்டும். முதலமைச்சருடைய முகம் தெரிகின்ற மாதிரி எங்களுக்குத் தொலைக்காட்சி வைத்துக் கொடுங்கள், எல்.இ.டி. தொலைக்காட்சி எங்கள் எல்லாருக்கும் வைத்துக் கொடுங்கள்” என்கிறார்.

நான் சொன்னேன். `எங்களால் இங்கே முன்னால் அமர்ந்து சகித்துக் கொள்ள முடியவில்லை. இது மிகப்பெரிய ஒரு கொடுமையின் உச்சமாக இருக்கிறது. எங்களால் முடியவில்லை, நாங்களெல்லாம் எழுந்து சென்று விடுகிறோம். நீங்களெல்லாம் வந்து எங்கள் இருக்கையில் அமர்ந்து கொள்ளுங்கள்” என்றேன்.

எம்.எல்.ஏ.க்கள் பாட்டுப் பாடுகிறார்கள்!

அவையில் பொதுவாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்வார்கள். ஆனால், இப்போது இங்கே பார்த்தீர்கள் என்றால், சட்டசபையில் எல்லாருமே பாட்டுப் பாடுகிறார்கள். அமைச்சர்கள் பாட்டுப் பாடுகிறார்கள், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் பாட்டுப் பாடுகிறார்கள். இதைச் சென்று சபாநாயகரிடம் சொன்னால் அவரும் பாட்டுப் பாடுகிறார். நான் சட்டசபையிலேயே சொல்லிவிட்டேன். ``சபாநாயகர் அவர்களே, எங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது. நாங்கள் சட்டசபைக்குத்தான் வருகிறோமா அல்லது சூப்பர் சிங்கர் நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறோமா?” என்று சபாநாயகரிடமே சொல்லி விட்டேன்.

இன்னொரு பெண்மணி இருக்கிறார். அந்த அம்மா எல்லாவற்றையும் பேசி முடித்துவிட்டு இறுதியாக முதலமைச்சரைப் பார்த்து `மன்மத நன்றி' என்கிறார். என்ன, சட்டசபையா இது?

இன்னொரு உறுப்பினர் இருக்கிறார், ராணிப்பேட்டையின் சட்டமன்ற உறுப்பினர். அவர்கள் ஒருநாள் எழுந்து நின்று `எங்கள் தொகுதியில் ஒரு மிகப்பெரிய இரப்பர் தொழிற்சாலை இருக்கிறது. அந்த இரப்பர் தொழிற்சாலையில் தினந்தோறும் தீ மூட்டி எரிக்கிறார்கள். அதனால் இரப்பர் எரிந்து மாசு ஏற்படுகிறது, சுற்றுச்சூழல் எல்லாம் பாதிக்கிறது, நிறைய புகை வருகிறது. அந்தத் தொழிற்சாலை மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று ஒரு சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறார்கள். நாங்களெல்லாம் அமர்ந்து கேட்டுக்கொண்டு இருக்கிறோம். முதலமைச்சரும் எல்லாவற்றையும் கேட்கிறார்.

உடனே என்ன ஆயிற்று, சுற்றுச்சூழல் அமைச்சர் என்று ஒருவர் இருக்கிறார், அவர் எழுந்து நின்று பதில் சொல்கிறார். ``எதற்கெடுத்தாலும் தி.மு.கவைச் சொல்வார்கள் அல்லவா, இதெல்லாம் தி.மு.க ஆட்சியில்தான் நடக்கும், நம் ஆட்சியில் இவற்றையெல்லாம் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். நாங்கள் இரண்டு மாதமாக எல்லா இடங்களுக்கும் ஆய்வு சென்று கொண்டு இருக்கிறோம். இனிமேல் சுற்றுச்சூழலுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமல் இருக்க, உடனடியாக அந்தத் தொழிற்சாலையில் நான் அரசு அதிகாரிகள், அமைச்சர் பெருமக்கள், முடிந்தால் முதலமைச்சரையும் அழைத்துக்கொண்டு சென்று நான் ஆய்வு செய்யப் போகிறேன். அந்தத் தொழிற்சாலையை இழுத்து மூடப் போகிறேன்” என்று சுற்றுச்சூழல் அமைச்சர் ஐந்து நிமிடங்கள் பதில் சொல்கிறார்.

தொழிற்சாலையே இல்லை!

அதன்பிறகு தொழில்துறை அமைச்சர் இருக்கிறார்கள் அல்லவா, அவர் எழுந்து நின்று சொல்கிறார். ``இங்கே பாருங்கள், சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு வந்தது என்றால், அதை நாம் சரியான முறையில் சரி செய்ய வேண்டும். தொழில் பாதிக்காத மாதிரி பார்த்துக்கொள்ள வேண்டும். நீங்கள் இப்படிச் செய்தீர்கள் என்றால், தமிழ் நாட்டிற்குள் மற்ற தொழில்கள் எல்லாம் வராது” என்று அவர் ஓர் ஐந்து நிமிடங்கள் பேசிவிட்டு அமர்ந்துவிட்டார்.

இராணிப்பேட்டையில் அப்படி என்ன தொழிற்சாலை இருக்கிறது, அப்படி என்ன இரப்பர் டயர் செய்கின்ற தொழிற்சாலை இருக்கிறது என்று தேடிப் பார்த்தால், அது ஒரு பஞ்சர் ஒட்டும் கடை. ராணிப்பேட்டையில் அப்படி ஒரு தொழிற்சாலையே இல்லை. சென்று தேடிப் பார்த்தால் வெறும் பஞ்சர் ஒட்டும் கடை.

இதற்கு ஓர் அமைச்சர் பதில் சொல்கிறார், ஆய்வுக்கு முதலமைச்சரையே அழைத்துச் செல்லப் போகிறாராம்! இப்படித்தான் இன்றைக்கு சட்டமன்றம் நடந்து கொண்டு இருக்கிறது. இன்னும் நடனம் ஆடவில்லை, சண்டை போடவில்லை அவைதான் பாக்கி. இந்தச் சட்டமன்றம் இனிமேலாவது ஒழுங்காக நடக்க வேண்டும் என்றால், மக்கள் பிரச்சினையைப் பேச வேண்டும் என்றால், மதுராந்தகம் தொகுதியில் இருந்து உங்களுடைய சட்டமன்ற உறுப்பினராக, உங்களுடைய பிரதிநிதியாக என்னுடைய அன்புச் சகோதரர் திரு. பரந்தாமன் அவர்களை நீங்கள் ஜெயிக்க வைத்து அனுப்ப வேண்டும்.

ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் செய்வேன்!

நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்போது இருக்கக்கூடிய முதலமைச்சர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் என்ன சொன்னார்? பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்தார். என்னென்ன தெரியுமா சொன்னார்? ``நான் ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் இதையெல்லாம் செய்யப் போகிறேன்” என்று சொன்னாரா இல்லையா?

முக்கியமாக என்ன சொன்னார்? மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாய் நம் தலைவர் கொடுத்தார். அதை உயர்த்தி 2,500 ரூபாய் தருகிறேன் என்று சொன்னாரா இல்லையா? இந்த முதலமைச்சர் சொன்னார், ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் கொடுப்பேன் என்றார். கொடுத்தாரா? கொடுக்கவில்லை.

அதே மாதிரி வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதந்தோறும் 4,500 ரூபாய் உதவித்தொகை ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் கொடுக்கிறேன் என்று இந்த முதலமைச்சர் சொன்னார். கொடுத்தாரா? கொடுக்கவில்லை.

அனைத்து இல்லங்களுக்கும், அனைத்து வீடுகளுக்கும் வருடத்திற்கு 6 கேஸ் சிலிண்டர் ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் கொடுப்போம் என்று சொன்னார். கொடுத்தாரா? கொடுக்கவில்லை. இப்போதுதான் அதைப்பற்றி யோசித்திருக்கிறார். என்ன தெரியுமா சொல்லியிருக்கிறார்? மூன்று கேஸ் சிலிண்டர் தருவேன், அதுவும் ``நான் எப்போது நினைக்கிறேனோ அப்போதுதான் கொடுப்பேன்” என்று சொல்லியிருக்கிறார்.

இது எல்லாவற்றையும் விட முக்கியம், விவசாயிகளுக்கு அனைத்துப் பயிர்க்கடனும் உடனடியாகத் தள்ளுபடி செய்வேன் என்று சொன்னார், கொடுத்தாரா? எதையும் கொடுக்கவில்லை. அதே நேரத்தில் சட்டம் ஒழுங்கு எந்த அளவிற்குச் சீர்கெட்டுப் போய் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும்.

500 படுகொலைகள் நடந்திருக்கின்றன!

கடந்த ஐந்து மாதத்தில் மட்டும் தமிழ்நாடு முழுவதும் ஆட்சிக்கு வந்து இன்னும் ஐந்து மாதம் கூட ஆகவில்லை, நான்கு மாதத்தில் தமிழ்நாடு முழுவதும் 500 படுகொலைகள் நடந்திருக்கின்றன. அதுவும் இந்த மேற்கு மண்டலத்தில், கோயம்புத்தூரில் பார்த்தீர்கள் என்றால், ஒரே மாதத்தில் 10 படுகொலைகள். சென்ற வாரம் ஒரே நாளில் எட்டு கொலைகள் நடந்திருக்கின்றன. பெண்களுக்கு எங்குமே பாதுகாப்பு இல்லை.

உங்களுக்குத் தெரியும், நேற்று முன்தினம் இங்கே வண்டலூரில் பள்ளி மாணவிக்குப் பாலியல் வன்கொடுமை நடந்திருக்கிறது. முதலில் இங்கே பிரச்சாரத்திற்கு வருகிறார்கள் என்று சொல்லி, அந்த மாணவியின் பெற்றோர்களுடைய புகாரைப் பெறாமல், பொய்ப் புகார் எடுத்திருக்கிறார்கள். என்னவென்று சொல்லி? பாம்பு கடித்தது என்று சொல்லி எடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு இதே மதுராந்தகத்தில் இன்னொரு சம்பவம் நடந்திருக்கிறது. ஐந்தாம் வகுப்பு படிக்கக்கூடிய ஒரு மாற்றுத்திறனாளிச் சிறுமியை வீட்டில் யாரும் இல்லாதபோது ஒரு கும்பல் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்திருக்கிறார்கள்.

இதுதான் இந்த முதலமைச்சர் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் கொடுக்கின்ற பாதுகாப்பா? முதலமைச்சர் ஆட்சிக்கு வந்தவுடன் சிங்கப் பெண் படை அமைத்திருக்கிறேன் என்று அன்றைக்கே அறிவித்தார். நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன், யாராவது ஒருவர், ஏதாவது ஒரு சிங்கப் பெண் படை காவல்துறையினரை எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா? நான்கு மாதமாக எங்குமே கிடையாது, வெறும் அறிவிப்பு.

இந்தக் கேடுகெட்ட ஆட்சியை, இந்த வெட்கங்கெட்ட ஆட்சிக்கு ஒரு பாடத்தைப் புகட்ட வேண்டும் என்றால், இந்தத் தேர்தலில் பரந்தாமன் அவர்களை நீங்கள் மதுராந்தகம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்து அனுப்ப வேண்டும்.

அரிவாள் வெட்டுக்குப் போட்டியாக மின்வெட்டு!

அரிவாள் வெட்டுக்குப் போட்டியாக இந்த ஆட்சியில் இன்னொன்று இருக்கிறது. அது என்னவென்றால் மின்வெட்டு. எங்குமே மின்சாரம் இல்லை. முதலமைச்சர் தொகுதியில் மின்சாரம் இல்லை. பெரம்பூரில் பார்த்தீர்கள் என்றால் தினமும் மக்கள் குடும்பம் குடும்பமாக வந்து தெருவில் போராட்டம் செய்துகொண்டு இருக்கிறார்கள். இப்படி எல்லாவற்றிற்கும் ஒரு சரியான பாடத்தைப் புகட்டுவதற்குச் சரியான நேரம்தான் இந்த மதுராந்தகம் இடைத்தேர்தல்.

6-ஆம் தேதி வாக்குச்சாவடிக்குச் சென்றீர்கள் என்றால் வாக்குப்பெட்டியில் மூன்றாவது பெயர், மூன்றாவது இடத்தில் பரந்தாமன் பெயர் இருக்கும், பக்கத்தில் உதயசூரியன் சின்னம் இருக்கும். 6-ஆம் தேதி மூன்றாவது இடத்தில் இருக்கக்கூடிய பரந்தாமனுடைய பெயரும் உதயசூரியன் சின்னமும் வாக்கு எண்ணிக்கையான 9-ஆம் தேதி முதலிடத்திற்கு வர வேண்டும்.

நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் அத்தனை பேரும் முடிவு செய்துவிட்டீர்கள், உதயசூரியன் சின்னத்தை ஜெயிக்க வைக்க வேண்டும். பல்வேறு மாவட்டங்களிலிருந்து தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட வந்திருக்கிறீர்கள். இங்கே இருக்கக்கூடிய தொகுதி மக்களும் வந்திருக்கிறீர்கள், வாக்காளப் பெருமக்களும் வந்திருக்கிறீர்கள். நீங்கள் ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள். `மாற்றம் வேண்டும் மாற்றம் வேண்டும்' என்று வாக்களித்தீர்கள். ஆனால், இன்றைக்கு எப்பேர்ப்பட்ட மாற்றத்தை இந்த முதலமைச்சர் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்? உங்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்.

நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்வது இன்னும் நம் கைகளில் ஒரு வாரம் இருக்கிறது, எட்டு நாட்கள் இருக்கின்றன. இந்த எட்டு நாட்களும் நீங்கள் ஒவ்வொருவரும் இந்த பிரச்சாரத்தை உங்களுடைய குடும்பத்தினரிடம் பேசுங்கள். உங்களுடைய நண்பர்கள், உங்களுடைய உறவினர்கள், உங்கள் வீட்டுப் பக்கத்தில் இருப்பவர்கள், எதிர் வீட்டில் இருப்பவர்களிடம் எல்லாம் பேசுங்கள்.

ஏன் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும், ஏன் பரந்தாமனை ஜெயிக்க வைத்து சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற பிரச்சாரத்தை அடுத்த எட்டு நாட்கள் நீங்கள் சரியாகச் செய்தீர்கள் என்றால், நிச்சயம் பல்லாயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் நம்முடைய பரந்தாமன் அவர்கள் ஜெயிக்கப் போவது உறுதி. மீண்டும் மதுராந்தகத்தில் உதயசூரியன் வெற்றி பெற்றுவிட்டது என்ற செய்தியை 9-ஆம் தேதி நீங்கள் கொடுக்க வேண்டும்.

உங்களை எல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவருடைய மகனாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாக, பூரிப்பாக சொல்ல வேண்டும் என்றால், முத்தமிழறிஞர் கலைஞரின் பேரனாகக் கேட்கிறேன்.

வருகின்ற 6-ஆம் தேதி சகோதரர் பரந்தாமன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திலே வாக்களித்து மிகப்பெரிய வெற்றியைத் தேடித்தாருங்கள். உங்கள் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி, நன்றி, நன்றி.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

பங்கேற்றவர்கள்

தேர்தல் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்டச் செயலாளர் சுந்தர் சி.வி.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம், கதிர் ஆனந்த், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.ஆர்.நாராயணன், கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், மேயர் மகாலட்சுமி யுவராஜ், நகர மன்றத் தலைவர் மலர்விழி குமார், நகரக் கழகச் செயலாளர் எம்.பி. குமார், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், அப்துல் மாலிக், இளையராஜா, ஜி.பி. ராஜா, பிரபு கஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் யுவராஜ், கோல்டு பிரகாஷ், கார்த்திக், திருத்தணி கிரண், லோகேஷ், தாகப்பிள்ளை, ராயல் அன்பு, துணை அமைப்பாளர்கள் ஆண்டோ செல்வராஜ், சஞ்சய் காந்தி, இளம்பருதி, நகர இளைஞர் அணி அமைப்பாளர் முகமது புகாரி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் செயலாளர் ராஜேந்திரன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்டச் செயலாளர் முகமது ரபீக், எஸ்.டி.பி.ஐ. கட்சி அக்பர் அகமது, மல்லை சத்யா, உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(26.09.2026)

தாம்பரம் அருகே அரசுப் பள்ளி மாணவி பாலியல் வன்கொடுமை!



த.வெ.க. ஆட்சியில் பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் பாதுகாப்பற்ற சூழல். த.வெ.க. ஆட்சியில் சிறுமிகளுக்கு எதிரான போக்சோ வழக்குகள் அதிகரிப்பு.

சென்னை தாம்பரத்தை அடுத்த சோமங்கலத்தில் அரசுப் பள்ளியில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவி பாலியல் வன்கொடுமை.

சமூகவலைதளம் மூலம் பழகி, பள்ளி மாணவியை தனியாக அழைத்துச்சென்று பாலியல் வன்கொடுமை செய்த முத்துசாமி என்பவர் போக்சோவில் கைது.

த.வெ.க. ஆட்சியில் பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் பாதுகாப்பற்ற சூழல் நிலவி வருகிறது. த.வெ.க. ஆட்சியில் சிறுமிகளுக்கு எதிரான போக்சோ வழக்குகள் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் அச்சம்.

அரசுப் பள்ளியில் 6ஆம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை!

செம்பாக்கம் அரசுப்பள்ளி தலைமை ஆசிரியர் போக்சோவில் கைது. செங்கல்பட்டு மாவட்டம் செம்பாக்கம் அரசுப் பள்ளியில் ஆறாம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை.

ஆறாம் வகுப்பு மாணவியிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்ட தலைமை ஆசிரியர் தாமஸ் மனோகரன் போக்சோவில் கைது.

கும்பகோணம் அருகே 17 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை!



தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே 17 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை.

நாச்சியார்கோவில் பகுதியைச் சேர்ந்த சிறுமியை வீட்டின் அருகே உள்ள பருத்தி வயலுக்கு அழைத்துச் சென்று கண்ணன் என்பவர் பாலியல் வன்கொடுமை.

17 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த கண்ணன் போக்சோ சட்டத்தில் கைது. த.வெ.க. ஆட்சியில் பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் பாதுகாப்பற்ற சூழல் நிலவி வருகிறது.

த.வெ.க. ஆட்சியில் சிறுமிகளுக்கு எதிரான போக்சோ வழக்குகள் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் அச்சம்.

பெண்ணுக்கு கொலை மிரட்டல்!

2 குழந்தைகளுடன் தூங்கிய சுதாவின் வீட்டின் மீது பீர் பாட்டிலில் பெட்ரோல் நிரப்பி வீசி தீ வைத்து கொளுத்த முயன்ற த.வெ.க.வினர்...



பயங்கர சப்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் ஓடி வந்து தண்ணீர் ஊற்றி அணைத்தனர்.

இதனால் தாயும் இரண்டு குழந்தைகளும் உயிர்தப்பினர்.

பெட்ரோல் குண்டுவீச்சில் 2 பேரை மட்டும் பெயரளவுக்கு கைது செய்துவிட்டு முக்கிய குற்றவாளிகளான ஆளுங்கட்சி நிர்வாகிகளை போலீஸார் பாதுகாப்பதாக குற்றச்சாட்டு. எனக்கும் என் பிள்ளைகளுக்கும் பாதுகாப்பு இல்லை சுதா கண்ணீர் பேட்டி.

நேரடி கொள்முதல் நிலையத்தில் தலைவிரித்தாடும் லஞ்சம்!

கடலூர் மாவட்டத்தில் 113 நேரடி கொள்முதல் நிலையங்கள் இயங்கி வரும் நிலையில் பல இடங்களில் அதிகாரிகள் கொள்முதல் செய்யவில்லை என புகார்.

உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலர் அமுதா ஐ.ஏ.எஸ். கடலூர் மாவட்ட ஆட்சியருடன் இணைந்து நேரடி கொள்முதல் நிலையத்தில் ஆய்வு.

நேரடி கொள்முதல் நிலையத்தில் த.வெ.க. நிர்வாகிகள் மூட்டைக்கு ரூ.55 கட்டாய வசூல் செய்வதாக விவசாயிகள் அடுக்கடுக்கான குற்றச்சாட்டு.

நேரடி கொள்முதல் நிலையத்தில் லஞ்சம் வாங்குவதாக புகார் எழுந்த நிலையில் பெரும் பரபரப்பு.

தாராபுரம் இடைத்தேர்தல் பணியில்

நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி தீவிரம்!

நாமக்கல், செப்.29-

திருப்பூர் கிழக்கு மாவட்டம், 101தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் பணிகளில் நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணியினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும், எதிர்க்கட்சித் தலைவரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடும், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் அறிவுறுத்தலின்படியும், குண்டடம் ஒன்றியம் நந்தவனப்பாளையம் ஊராட்சியில் உள்ள 24வது வாக்குச்சாவடியில் வாக்கு சேகரிப்பு நடைபெற்றது.

மாநில இளைஞரணி துணைச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான பி.எஸ்.சீனிவாசன் அவர்களின் வழிகாட்டுதலோடு, குண்டடம் ஒன்றியத்திற்கு உட்பட்ட இளைஞரணி நிர்வாகிகளுடன் இணைந்து வாக்காளர்களைச் சந்தித்து வாக்குகள் சேகரிக்கப்பட்டன.

இந்த வாக்கு சேகரிப்புப் பணியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மாவட்ட துணை அமைப்பாளர் கார்த்திக், திருப்பூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், நகர மாணவர் அணி துணை அமைப்பாளர் கிஷோர் மற்றும் குண்டடம் ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள் பங்கேற்று, வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



தாராபுரம் இடை தேர்தலில் நீலகிரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள “நல்லாம்பாளையம்” ஊராட்சிக்கு உட்பட்ட 242, 243, 244 ஆகிய வாக்குச்சாவடி பகுதிகளுக்கு உட்பட்ட கிளைக் கழக செயலாளர்கள், பாக நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டப் பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜ்6 தலைமையில், பூத் பொறுப்பாளர் சுப.சந்திரசேகர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. உடன் கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் மு.திராவிடமணி, மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், உதகை கிழக்கு நகர செயலாளர் ஜார்ஜ், ஒன்றிய செயலாளர்கள் பிரேம்குமார், பீமன், தாராபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் துரைசாமி, காங்கேயம் வடக்கு ஒன்றிய செயலாளர் கருணை பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள், பூத் பொறுப்பாளர்கள் பலர் உள்ளனர்.